වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை 2021
Annual Report



රාජ්‍ය භාෂා කොමිෂන් සභාව
அரசகரும மொழிகள் ஆணைக்குழு
Official Languages Commission



"ජනජයසිටි" ගොඩනැගිල්ල, 09 වන මහල, නාවල පාර, රාජගිරිය.
"ஜனஜயசிட்டி" கட்டடத்தொகுதி, 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரிய.
"Janajayacity" Building, 09th floor, Nawala Road, Rajagiriya.
http://olc.gov.lk/

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல்
E-Mail
olcommission@gmail.com
olc@sltnet.lk

කාර්යාලය
அலுவலகம்
Office
2889482

உள்ளடக்கம்

அறிமுகம் 3

பகுதி I 4-10

1. தொலைநோக்கு
2. செயற்பணி
3. நோக்கங்கள்
4. பிரதான பணிகள்
5. நிறுவனக் கட்டமைப்பு – 2021.12.31 ஆம் திகதியன்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு
6. ஆணைக்குழுக் கூட்டங்கள்
7. இணையத்தள மறுவடிவமைப்பு
8. ஆணைக்குழுவைப் புதிய அலுவலக வளாகத்திற்குக் கொண்டு செல்லல்

பகுதி II 11-21

1. மேற்பார்வை – மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்ளல்.
2. விசாரணை – முறைப்பாடுகள் மீதான விசாரணை
3. கல்வி – விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்
4. தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்துடன் (NLEAP) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

பகுதி III - நிதிக்கூற்றுக்கள் 22-43

பகுதி IV- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. 44- 51

அறிமுகம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2021 வருடாந்த அறிக்கையின் முதலாவது பகுதியில் ஆணைக்குழுவின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் குறித்த தகவல்கள், பணிக்குழு தகவல்கள் என்பவற்றுடன் நிர்வாகத்திற்கு ஏற்புடைய விடயங்கள் உள்ளடங்கும்.

1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தில் 4 நோக்கங்கள் காணப்படுகின்றன. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேற்பார்வை, விசாரணை, கல்வி மற்றும் ஆலோசனை போன்ற பிரதான பணிகளுக்கு ஏற்ப மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்ளல், பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரித்தல், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் மற்றும் அரசாங்கத்திடம் பரிந்துரைகளை வழங்கல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அச்செயற்பாடுகளுக்கு ஏற்புடைய தகவல்கள் இவ்வருடாந்த அறிக்கையின் இரண்டாவது பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்று மற்றும் அக்காலப்பகுதிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய இறுதி கணக்காய்வு அறிக்கையானது இவ்அறிக்கையின் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது பகுதிகளில் உள்ளடங்கும்.

பகுதி I

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

01. தொலைநோக்கு

பொதுமக்களுக்கு சேவையினை வழங்குகின்ற சகல நிறுவனங்களிலும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவித்த நிறுவனமாக விளங்குதல்.

02. செயற்பணி

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசாரணை, கண்காணிப்பு, கல்வி மற்றும் ஆலோசனை என்பவற்றினூடாக பொதுமக்களின் இரு மொழித் தேவைகளை வழங்குதல்.

03. நோக்கங்கள்

ஆணைக்குழுவின் பொது நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) அரசகரும மொழிக் கொள்கையின் பயன்பாடு தொடர்பில் கொள்கை ரீதியான அடிப்படைக் கோட்பாடுகளை சிபாரிசு செய்தல் மற்றும் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுகின்றமை குறித்து விழிப்புடன் செயற்படுதல் மற்றும் கண்காணித்தல்.

(ஆ) அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப் பிரயோகம், அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் தாற்பரியம் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்வதற்கு அவசியமாகக் கூடிய சகல செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(இ) அரசகரும மொழிகள் மதிப்பீடு, ஊக்குவிப்பு மற்றும் அவற்றின் அந்தஸ்து, சமத்துவம் மற்றும் பிரயோகிக்கும் உரிமையினை வரவேற்றல், நடைமுறைப்படுத்திச் செல்லல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல்.

(ஈ) தனது செயற்பாடுகள் மற்றும் கிடைக்கப்பெறும் ஏதேனும் முறைப்பாடுகளுக்குப் பதில் வழங்குதல் ஆகிய இரண்டு முறைகளிலும் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

04. பிரதான பணிகள்

மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்காக ஆணைக்குழு நான்கு பிரதான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கொள்கை ரீதியான கோட்பாடுகளை வகுத்தல் - ஆலோசனை
2. அரசகரும மொழிகளின் பிரயோகம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் அரச பொறிமுறையினால் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் - கண்காணிப்பு
3. குறித்த மொழிகளின் அந்தஸ்து அல்லது பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் - கல்வி
4. அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொழி உரிமைகளை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் - விசாரணை

05. நிறுவனக் கட்டமைப்பு


சனாதிபதி அவர்களினால் அரசகரும மொழிகள் ஆணைக்குழு நியமிக்கப்படும். ஆணைக்குழுவானது ஆறு உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. ஒரு உறுப்பினர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார். தலைவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார்.

2020/01/22 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தது.

1. சட்டத்தரணி டீ. கலன்சூரிய (தலைவர்)
2. பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா (கொழும்பு பல்கலைக்கழகம்)
3. பேராசிரியர் ரதிராணி யோகேந்திரராஜா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
4. பேராசிரியர் துஷ்யந்தி மெண்டிஸ் (கொழும்பு பல்கலைக்கழகம்)
5. கலாநிதி கவிதா ராஜரத்னம் (களனி பல்கலைக்கழகம்)
6. வசந்த ஏக்கநாயக்க (முன்னாள் செயலாளர் - கலாசார, கலை மற்றும் புத்தசாசன அமைச்சு)

இந்தக் காலப்பகுதியில் இலங்கை நிர்வாக சேவையின் (1) ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான அரசகரும மொழிகள் ஆணையாளர் திருமதி. செனோஜி ருவினிகா பெரேரா உத்தியோகபூர்வ ரீதியாக ஆணைக்குழுவின் செயலாளராக செயற்பட்டார்.

2021/12/31 ஆம் திகதியில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு



2021.12.31 ஆம் திகதியாகும் போது ஆணைக்குழுவில் கடமையாற்றிய பணியாட்டொகுதியினர்.

தொடரிலக்கம்	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை	பணியாட்களின் உண்மையான எண்ணிக்கை	குறிப்பு
01.	பணிப்பாளர்	01	-	வெற்றிடங்கள் 01
02.	உதவிப் பணிப்பாளர்	01	01	
03.	மொழி அதிகாரி	03	01	வெற்றிடங்கள் 02
04.	நிர்வாக உத்தியோகத்தர்	01	01	
05.	நிதி அதிகாரி	01	-	வெற்றிடங்கள் 01
05.	பிரதான எழுதுவினைஞர்	01	01	
06.	மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி	10	04	வெற்றிடங்கள் 06
07.	அபிவிருத்தி உத்தியோகத்தர்	04	03	வெற்றிடங்கள் 01
08.	முகாமைத்துவ உதவியாளர்	10	08	வெற்றிடங்கள் 02
09.	மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்)	01	-	வெற்றிடங்கள் 01
10.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்)	01	-	வெற்றிடங்கள் 01
11.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்)	01	-	வெற்றிடங்கள் 01
12.	சாரதி	03	02	வெற்றிடங்கள் 01
13.	அலுவலக உதவியாளர்	04	03	வெற்றிடங்கள் 01
	மொத்த எண்ணிக்கை	**42**	**24**	**வெற்றிடங்கள் 18**

06. ஆணைக்குழுக் கூட்டங்கள்

2021 ஆம் ஆண்டில் 06 ஆணைக்குழுக் கூட்டங்கள் பின்வரும் தினங்களில் நடாத்தப்பட்டுள்ளதுடன், சில கூட்டங்கள் நிகழ்நிலை முறையில் நடாத்தப்பட்டன.


கூட்ட திகதி	நடைபெற்ற முறை
2021.01.29	நிறுவனத்தில்
2021.03.17	நிறுவனத்தில்
2021.04.22	நிறுவனத்தில்
2021.07.29	நிறுவனத்தில்
2021.11.11	நிறுவனத்தில்
2021.12.23	நிகழ்நிலை முறையில்

07. இணையத்தள மறுவடிவமைப்பு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் இணையத்தளமானது இற்றைப்படுத்தப்படாது செயற்படாத நிலையில் காணப்பட்டமையினால் அதன் ஊடாக எதிர்பார்த்த நோக்கங்களை அடைய முடியாமற் போனது. இவ் விடயமானது ஆணைக்குழுவின் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டதோடு, அதனை மிக விரைவில் மறுவடிவமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (NLEAP) தொழிநுட்ப உதவியைப் பெற்றுக் கொண்டு இணையத்தளத்தை மறுவடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசகரும மொழிக் கொள்கை மற்றும் மொழி உரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்தல் வேண்டுமென்பதை ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளது. ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அனைத்து வருடாந்த அறிக்கைகள், பரிந்துரைகள், நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் போன்றவை இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செட் பொட் (Chat bot) ஊடாகத் தகவல்களை பொதுமக்களுக்கு விநியோகிக்கும் பணி மிக வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தின் மூலம் மொழி உரிமைகள் மீறப்படல் தொடர்பில் பொதுமக்களின் முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் தொடர்பான விசேட அதிகாரங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. தொலைபேசி அழைப்பு மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் இவ்வாறான முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்படுகின்றன. மேலும், இணையத்தளத்தின் ஊடாகவும் ஆணைக்குழுவிடம் பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



புகைப்படம் 1 இணையத்தளம்

08. ஆணைக்குழுவைப் புதிய அலுவலக வளாகத்திற்குக் கொண்டு செல்லல்

ஆணைக்குழு அலுவலகமானது கடந்த காலப்பகுதிகளில் தனியார் கட்டிடங்களில் அமைந்துள்ள பல அலுவலக வளாகங்களில் இயங்கியுள்ளது. இவ்வாறு அவ்வப்போது அலுவலக வளாகத்தை மாற்றுவதன் காரணமாக புதிய அலுவலக வளாகத்தை அமைத்தல் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொண்டு செல்வதற்குத் தேவையான செலவினங்களை ஏற்க நேரிடுதல், அலுவலக வளாகம் மாற்றமடைவதன் காரணமாக சேவை பெறுநர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகுதல் போன்ற பல பாதகமான சூழ்நிலைகள் உருவாகின.

ஆணைக்குழு அலுவலகமானது இராஜகிரிய, புத்கமுவ வீதி, இலக்கம் 40 எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் இறுதியாக இயங்கி வந்தது. அமைச்சின் வியடப்பரப்பு மாற்றமடைந்ததன் காரணமாக குறித்த கட்டிடமானது சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஆணைக்குழு அலுவலகம் இயங்கி வந்த அலுவலக வளாகத்தை மிக விரைவாக சிறைச்சாலைகள் அமைச்சிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவிற்கு அலுவலக வளாகமொன்றைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பில் வரிசை அமைச்சிடம் கோரிக்கையொன்றை முன்வைத்த போதும் அதற்கு பதில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் இராஜகிரியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குரித்தான ஜனஜயசிட்டி கட்டிடத்தில் ஆணைக்குழுவிற்கு அலுவலக வளாகமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவை நாவல வீதியில் அமைந்துள்ள ''ஜனஜய சிட்டி'' கட்டிடத்தில் 4000 சதுர அடி அளவிலான அலுவலக வளாகத்திற்குக் கொண்டு வர முடிந்தது. இவ்வளாகத்தைப் பெற்றுக் கொள்கையில் ஆணைக்குழுவிற்குப் பல்வேறு தடைகளுக்கு முகங் கொடுக்க நேரிட்டது. அவையாவன,

i. பெரும்பாலான அரச நிறுவனங்கள் ஜனஜயசிட்டி கட்டிடத்தில் எஞ்சியிருந்த மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அலுவலக வளாகத்தைக் கோரியிருந்தமை. தனிப்பட்ட உரிமையைக் கொண்ட கட்டிடங்களில் இயங்கிய அனைத்து அரச நிறுவனங்களையும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டிடங்களுக்குக் கொண்டு செல்ல கொள்கைசார் தீர்மானமொன்றை எடுத்துள்ளமையே அதற்குக் காரணமாகும்.
ii. வைப்புத் தொகையொன்றை செலுத்த வேண்டிய தேவைப்பாடு.
iii. நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நகர சபையுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்படுகின்றமை.

எவ்வாறாயினும் நகர சபையுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடியதன் மூலம் ஜனஜயசிட்டி கட்டிடத்தில் 9 ஆவது மாடியில் எஞ்சியிருந்த 4000 சதுர அடி அளவிலான அலுவலக இடத்தினை ஆணைக்குழுவினால் பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ்அலுவலக வளாகமானது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு, முப்பது வருட அல்லது தொண்ணூற்று ஒன்பது வருட நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தற்போது ஆரம்ப கட்ட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

நீண்ட கால குத்தகை அடிப்படையில் அலுவலக வளாகமொன்றைப் பெற்றுக் கொண்டால் ‘‘ஜனஜய சிட்டி’’ கட்டிடத்தில் நீண்ட காலம் ஆணைக்குழுவினால் இயங்க முடியும். அதன் போது அலுவலக வளாகத்தை அவ்வப்போது மாற்றம் செய்வதனால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க முடியும்.

ஆணைக்குழுவின் தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள ‘‘ஜனஜய சிட்டி’’ கட்டிடமானது இராஜகிரிய நகர மத்தியில் அமைந்துள்ளது. எனவே, உரிய திறத்தவர்களால் இலகுவில் ஆணைக்குழுவை அணுக முடியும். இவ்அலுவலகமானது அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளமையால் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ செயலாளரான அரசகரும மொழிகள் ஆணையாளரதும் சேவையை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.



புகைப்படம் 2 – அரசகரும மொழிகள் ஆணைக்குழு அமைந்துள்ள ‘‘ஜனஜய சிட்டி’’ கட்டிடம்

பகுதி II

இவ் ஆணைக்குழுவின் பணிகள் பிரதானமான 04 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

1. மேற்பார்வை
2. விசாரணை
3. கல்வி
4. ஆலோசனை

மேற்குறித்த பிரிவுகளுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

01. மேற்பார்வை – மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்ளல்.

மொழிக் கணிப்பாய்வானது ஆணைக்குழுவின் மேற்பார்வை பணியுடன் தொடர்புடைய செயற்பாடாகும். இதன் போது அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக ஆணைக்குழு நேரடியாகப் பரிசீலனைக்கு உட்படுத்தி இனங்காணப்படும் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்காத சூழ்நிலைகள் குறித்து பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், பின்னூட்டல் போன்றன ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

பின்வரும் அளவுகோல்களுக்கு அமைவாக மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படும்.

1. நிறுவன வளாகத்தில் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்படும் அனைத்துப் பலகைகள், (பெயர்ப் பலகைகள், தகவற் பலகைகள், அறிவுறுத்தற் பலகைகள்)
2. பொதுமக்கள் சேவைக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து ஆவணங்கள்
3. அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு
4. உத்தியோகத்தர்களின் தொடர்பாடற் திறன்
5. சிங்கள/தமிழ் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்
6. உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி
7. இணையத்தளம்
8. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள்
9. முகப்பு அலுவலகப் பின்னணி
10. நிறுவனத்துடன் தொடர்புடைய விசேடமான விடயங்கள் (உ-ம் :- பொலிஸ் நிலையங்கள் - முறைப்பாடுகளைப் பதிவு செய்தல், பிறப்பு/விவாக/மரண பதிவாளர் - சான்றிதழ்களை அரசகரும மொழிகளில் வழங்குதல்)

இவ் ஆய்வின் போது அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் நிலவும் அனைத்து முரண்பாடுகளும் இனங்காணப்படும். குறித்த முரண்பாடுகளை சீராக்குவதற்கு ஏற்புடைய நிறுவனத் தலைவரிடம் பரிந்துரைகள் முன்வைக்கப்படும். அப்பரிந்துரைகளை 3 மாத காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தி ஆணைக்குழுவிடம் அறிக்கையிடல் வேண்டும். இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மொழிக் கணிப்பாய்வுகள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணை மூலம் தரப்பட்டுள்ளன.

தொடரிலக்கம்	கணிப்பாய்வு மெற்கொள்ளப்பட்ட நிறுவனங்கள்	திகதி
1.	மக்கள் வங்கி – தலைமையகம்	2021.01.06
2.	இலங்கை வங்கி – தலைமையகம்	2021.01.14
3.	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்	2021.04.07
4.	தெஹிவளை பிரதேச செயலகம்	2021.01.20
5.	மஹரகம பிரதேச செயலகம்	2021.01.20
6.	குடிவரவு, குடியகல்வு திணைக்களம்	2021.01.09
7.	காணிப் பதிவாளர் அலுவலகம்	2021.01.06
8.	தேர்தல்கள் ஆணைக்குழு	2021.02.09
9.	கல்வி அமைச்சு	2021.02.11
10.	இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்	2021.03.10
11.	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்	2021.03.19
12	தேசிய சேமிப்பு வங்கி – தலைமையகம்	2021.03.31
13	பரீட்சைகள் திணைக்களம்	2021.04.01
14	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	2021.04.07



புகைப்படம் 3 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



புகைப்படம் 4 – காணி பதிவாளர் திணைக்களம்



புகைப்படம் 5 – இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்



புகைப்படம் 6 – பரீட்சைகள் திணைக்களம்

02. விசாரணை – முறைப்பாடுகள் மீதான விசாரணை

அரசகரும மொழிக் கொள்கை மீறல் தொடர்பில் கிடைக்கப்பெறும் பொதுமக்கள் முறைப்பாடுகள் மீதான விசாரணைக்கு ஆணைக்குழு சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு விசேட அதிகாரங்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் மீதான விசாரணையானது ஆணைக்குழுவின் பிரதானமான ஒரு பணியாவதோடு, ஆணைக்குழுவிற்குப் பின்வரும் முறைகளில் முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

01. கடிதங்கள் மூலம்
02. ஆணைக்குழுவிற்கு சமுகமளித்து முன்வைப்பதன் மூலம்
03. அச்சு ஊடகங்களில் பிரசுரமாகும் முறைப்பாடுகள்
04. மின்னஞ்சல்
05. தொலைபேசி செய்திகள்
06. 071-9521436 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் மூலம்

கடந்த வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் இவ்வருடத்தில் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவானதாகும். முந்தைய ஆண்டுகளில் 1956 எனும் இலக்கத்தின் மூலம் அதி கூடிய எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். 2021 ஆம் ஆண்டளவில் குறித்த இலக்கம் செயலிழந்ததன் காரணமாக அதன் ஊடாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் முற்றாகத் தடைப்பட்டன. இதன் காரணமாக மீளாய்வாண்டில் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டில் ஆணைக்குழுவிடம் 13 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முந்தைய வருடத்தில் தீர்க்கப்படாத முறைப்பாடுகளும் உள்ளடங்கலாக இவ்வருடத்தில் 56 முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விசேடமான சில முறைப்பாடுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

முறைப்பாடுகள்	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
கொழும்பு இலக்கம் 01 தொழில் நியாயசபையின் உதவி செயலாளர் தமிழ் இனப் பெண் ஒருவருக்கும் தமிழ் இன நபரொருவருக்கும் அவர்கள் கொண்டு வந்த அச்சு ஆவணங்களை நிராகரித்து ஏசியதன் மூலம் புரிந்த துர்நடத்தை	அரசகரும மொழிகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களினால் 2021.01.18 ஆம் திகதி கொழும்பு இலக்கம் 01 தொழில் நியாயசபையில் இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று நீதி அமைச்சினாலும் இது தொடர்பில் விளக்கம் கோரப்பட்டது. அதற்கமைய பொதுமக்கள் கோரும் அரசகரும மொழியில் சேவையை வழங்கக் கூடிய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உடபுஸ்சல்லாவை எமஸ்ட் தோட்டத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சமூர்த்தி அபிவிருத்தி வங்கியின் பிரதான பெயர்ப்பலகையில் தமிழ் மொழியில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றமை.	இது தொடர்பில் உடபுஸ்சல்லாவை சமூர்த்தி வங்கியின் முகாமையாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான தொரு வங்கி அவ்விடத்தில் இல்லை எனக் குறிப்பிட்டு கடிதம் மீள அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
மேல்மாகாண இறைவரித் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மேல் மாகாண நிதி சாசனத்தின் 62 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி முத்திரைக் கட்டண பெறுமதி தொடர்பான அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் மாத்திரம் காணப்படல்.	விண்ணப்பப்படிவத்தைத் தமிழ்மொழியில் தயாரித்து, ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அவ் ஆவணத்தில் காணப்பட்ட எழுத்துப் பிழைகளையும் திருத்துமாறு மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
பெலிஅத்த பொலிஸ் நிலையத்தின் பிரதான பெயர்ப்பலகையில் ‘‘பெலிஅத்த’’ என்பது தமிழ்மொழியில் எழுத்துப் பிழைகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை.	இது தொடர்பில் பெலிஅத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப்பலகையில் தமிழ்மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
நுவரெலியா பிரதேச சபையினால் நுவரெலியா பொது பஸ் நிலையம் எனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் ‘‘நுவரெலியா’’ என்பது தமிழ்மொழியில் பிழையாகக் குறிப்பிட்டுள்ளமை.	இது தொடர்பில் நுவரெலியா பிரதேச சபை செயலாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
ஹோமாகம மின்சார சபையின் பிரதான பெயர்ப்பலகையில் தமிழ்மொழியில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றமை.	இது தொடர்பில் ஹோமாகம மின்சார சபையின் தலைமை பொறியியலாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய பிரதான பெயர்ப்பலகையை பிழையின்றி தயாரிப்பதற்கு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தி கிளை மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் தமிழ்மொழியில் பிழைகள் காணப்படுகின்றமை.	இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப்பலகையை சரியாகத் தயாரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீதி அமைச்சினால் சமாதான நீதவான் பதவிக்கு வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தாளில் ''விண்ணப்பப்படிவத்தை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் தெளிவான எழுத்தில் பூர்த்தியாக்குதல் வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை, தமிழ்மொழியில் பூர்த்தியாக்க வேண்டாமெனக் குறிப்பிடப்படுள்ளமைக்கான காரணம் என்ன என்பதையும் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தியாக்குவதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் தாளை மும்மொழிகளிலும் தயாரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
கம்பஹா நில அளவையாளர் திணைக்கள அலுவலகத்தின் கடித முகப்பில் தமிழ்மொழியில் பிழைகள் காணப்படுகின்றமை அறிவிக்கப்பட்டுள்ளது.	இது தொடர்பில் கம்பஹா நில அளவையாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. கடித முகப்பில் தமிழ்மொழியில் காணப்படும் பிழைகளைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
கம்பஹா காணி உரித்து நிர்ணய பிரதேச அலுவலகத்தின் கடித முகப்பில் தமிழ்மொழியிலும் சிங்கள மொழியிலும் பிழைகள் காணப்படுகின்றமை அறிவிக்கப்பட்டுள்ளது.	இது தொடர்பில் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் கம்பஹா அலுவலகத்தின் பிரதி ஆணையாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. கடித முகப்பில் தமிழ்மொழியிலும் சிங்கள மொழியிலும் காணப்படும் பிழைகளைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தின் கடித முகப்பில் தமிழ்மொழியிலும் சிங்கள மொழியிலும் பிழைகள் காணப்படுகின்றமை.	இது தொடர்பில் வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. கடித முகப்பில் தமிழ்மொழியிலும் சிங்கள மொழியிலும் காணப்படும் பிழைகளைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவிற்கு விருந்தினர்களுக்கு வழங்கப்பட்ட அழைப்பிதழில் ''பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்'' என்பது தமிழ்மொழியில் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை.	இது தொடர்பில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் பட்டமளிப்பு விழாவிற்கு வழங்கப்படும் அழைப்பிதழை பிழையின்றி மும்மொழிகளிலும் தயாரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து அமைச்சின் கடித முகப்பில் தமிழ்மொழியில் உள்ளடக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டு சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படல்.	இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடமிருந்து அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன. கடித முகப்பில் தமிழ்மொழியை உள்ளடக்கி தயாரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

03. கல்வி – விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

ஆணைக்குழுவினால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அரச மற்றும் பகுதியளவிலான நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அரசகரும மொழிக் கொள்கையின் சட்டப் பின்னணி மற்றும் உத்தியோகத்தர்களின் பொறுப்பு குறித்து தெளிவூட்டுவதே இந்நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

அரச நிறுவனங்களில் சேவை வழங்கலை அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவானதாகப் பேணுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஆணைக்குழுவினால் மொழி உரிமைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டலும் மேற்கொள்ளப்படுகிறது. இதன் பொருட்டு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்படுவதோடு, அதன் மூலம் மொழி உரிமைகள் குறித்து மக்களின் அறிவையும் புரிந்துணர்வையும் விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்த்தவாறு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாமற் போனது. எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் Zoom தொழிநுட்பத்தையும் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்பாடுகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடரிலக்கம்	**விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்**	**திகதி**
01.	தாய்மொழித் தினத்தை முன்னிட்டு பத்திரிகை ஆக்கங்களைப் பிரசுரித்தல் **(இணைப்பு I மற்றும் II ஐப் பார்க்க)**	28.02.2021
02.	சிங்கள மொழித் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்	03.03.2021
03.	ருகுனு பல்கலைக்கழக மாணவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்	18.06.2021
04.	கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்	26.07.2021
05.	சர்வதேச சைகை மொழித் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்	24.09.2021

சிங்கள மொழித் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் பொருட்டு நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான விரிவுரையானது "சிங்கள இலக்கண விதிகள் மற்றும் துல்லியமான மொழிப் பாவனை" என்ற தலைப்பில் பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா அவர்களினால் நடாத்தப்பட்டது. அதன் பொருட்டு 44 ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கைப் பிரிவின் முதலாம் வருட மாணவர்களுக்கு நிகழ்நிலை முறையில் நடாத்தப்பட்ட அரசகரும மொழிக் கொள்கை குறித்த விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏறத்தாழ 100 மாணவர்கள் பங்குபற்றினர். அதே போன்று ருகுனு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கற்கைப் பிரிவின் மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏறத்தாழ 200 மாணவர்கள் பங்குபற்றினர்.

செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சைகை மொழித் தினத்தை முன்னிட்டு நிகழ்நிலை முறையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

சிங்கள மொழித் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் பொருட்டு இலங்கை மன்றத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்



புகைப்படம் 7 – தலைவர் உரை நிகழ்த்திய போது



புகைப்படம் 10 – நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய ஊடகவியலாளர்கள்

04. தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டதுடன் (NLEAP) இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கை அரசாங்கத்திற்கும் கனடா அரசாங்கத்திற்குமிடையிலான இருதரப்பு உடன்படிக்கையின் படி தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (NLEAP) இன் ஊடாக ஆணைக்குழுவின் பணிகளுக்குத் தேவையான தொழிநுட்ப உதவி வழங்கப்படுகிறது. இவ்வருடத்தில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (NLEAP) ஊடாக ஆணைக்குழுவிற்குத் தொழிநுட்ப உதவி வழங்கப்பட்டுள்ளது.

1) நிகழ்நிலை மூலமான தொழிநுட்ப அறிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

கனேடிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் பணிகள் நிறைவேற்றப்படும் முறை குறித்து இவ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் பொருட்டு நிகழ்நிலை முறையின் கீழ் தொழிநுட்ப அறிவைப் பரிமாற்றிக் கொள்ளும் பல நிகழ்நிலை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. கனேடிய அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் வளவாளர்களாக செயற்பட்டனர். பின்வரும் துறைகள் உள்ளடங்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

i. வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்.
ii. பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணை.
iii. மொழி உரிமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
iv. கருத்துக்கணிப்புகள் மற்றும் சோதனைகளை மேற்கொள்ளல்.

2) பாடசாலை மாணவர்களுக்கு நாடளாவிய கட்டுரைப் போட்டியொன்றை நடாத்துதல்.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக பாடசாலைகளை உரியவாறு நடாத்த முடியாத ஒரு சூழ்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு வீட்டிலேயே நேரத்தைக் கழிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. இக்காலப்பகுதியில் பாடசாலை மாணவர்களைப் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நோக்கில் ஆணைக்குழுவானது தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தியது. ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் 1200 கட்டுரைகள் ஆணைக்குழுவிற்குக் கிடைத்தன. இக்கட்டுரைப் போட்டியின் பரிசளிப்பு விழாவை 2022 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

3) பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழு மூலம் அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் திறத்தவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்படும். அரச உத்தியோகத்தர்கள், பகுதியளவிலான அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் நிறுவனத் தலைவர்களை ஒன்றுதிரட்டி நடாத்தப்படும். ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களே இந்நிகழ்ச்சித் திட்டங்களின் வளவாளர்களாக செயற்படுவதனால் அவ் உத்தியோகததர்களுக்குப் பயிற்சியளிக்கும் தேவைப்பாடு நிலவியது. அத்தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குத் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தொழிநுட்ப உதவியுடன் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் மூன்று நாள் செயலமர்வொன்று இவ்வருடம் கோல்பேஸ் ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

4) அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பை மறுவடிவமைத்தல்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பானது ஆணைக்குழு சட்டத்தின் நோக்கங்களுடன் பொருந்தும் வகையில் முறையாக வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தொழிநுட்ப உதவியுடன் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பை அதன் நோக்கங்களுடன் பொருந்தும் வகையில் மறுவடிவமைத்து முன்மொழிவொன்றாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நாட்டில் கொவிட் 19 தொற்று நிலவிய காலகட்டத்திலேயே ஆணைக்குழுவானது மேற்குறித்த அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டது. இக்காப்பகுதியில் சில சந்தர்ப்பங்களில் பின்வரும் தடைகள் அலுவலக நடவடிக்கைகளுக்குத் தாக்கம் செலுத்தின.

i. அரச அலுவலகங்களை மூடுதல்.
ii. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பணிக்குழுவினரை சேவைக்கு அழைத்தல்.
iii. மாவட்ட மற்றும் மாகாணங்களுக்கிடையில் பயணத்தடை விதித்தல்.
iv. தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் விதித்தல்.
v. கூட்டங்களை நடாத்த முடியாமற் போதல்.
vi. வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்று கடமைகளை நிறைவேற்றுவதற்கு வரையறைகளை விதித்தல்.
vii. பாடசாலைகளை மூடுதல்.

ஆணைக்குழுவின் பெரும்பாலான செயற்பாடுகளின் போது அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படும். பிரதான செயற்பாடான மொழிக் கணிப்பாய்வுகளை மேற்கொள்கையில் ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவானது வேறு அரச நிறுவனங்களுக்குச் சென்று இனங்கண்ட அளவுகோல்களுக்கு அமைவாக பௌதிக ரீதியில் அப் பணியை மேற்கொள்கிறது. எனினும், மேற்குறித்த மட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 14 மொழிக் கணிப்பாய்வுகளை மாத்திரமே மேற்கொள்ள முடிந்தது. ஏனைய வருடங்களின் போது 60 இற்கும் மேற்பட்ட கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசகரும மொழிக் கொள்கை மற்றும் மொழி உரிமைகள் தொடர்பில் திறத்தவர்களுக்கு ஆணைக்குழுவினால் விழிப்புணர்வூட்டப்படும். கூட்டங்களை நடாத்துதல் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்பார்த்தவாறு மேற்கொள்ள முடியாமற் போனது. மாற்று வழியாக, நிகழ்நிலை முறையின் கீழ் வரையறுக்கப்பட்ட சில நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்ததன் காரணமாக பாடசாலை மொழி மேம்பாட்டுத்தர வட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாயமற் போனது.

நிலவிய தொற்று நிலைமை அடிப்படையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய ஆணைக்குழுக் கூட்டங்களும் ஆணைக்குழு அலுவலகத்திலேயே நடாத்தப்பட்டதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் நிகழ்நிலை முறை மூலமாகவும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

நிலவிய கொவிட் தொற்று நிலைமையானது 2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் செயலாற்றுகையின் மீது குறிப்பிடத்தக்க அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை மேற்குறித்த விடயங்கள் மூலம் புலனாகின்றது.

இணைப்பு I



தாய்மொழி பயன்பாடு படிப்படியாக அருகிச் செல்வது ஆபத்தான அறிகுறி!

புதிய கற்பித்தல் பொறிமுறைகளை உள்வாங்கி தமிழ் மொழியைக் கற்பிப்பதே இலகுவான வழி

சர்வதேச தாய்மொழித் தினம் இன்று

பலருக்கும் தெரியாத தமிழ் மொழியின் சிறப்புகள்!

புலம்பெயர் தமிழர்களின் எதிர்கால சந்ததியினரிடமிருந்து படிப்படியாக தூர விலகுகின்றது தமிழ்மொழி!



දිවයින

වෂී 2021ක් වූ පෙබරවාරි මස 21 වැනිදා ඉරිදා

රාජ්‍ය භාෂා කොමිෂන් සභාවේ සභාපති නිහඬකළ ඩී.කනලංකාරිය

ශ්‍රී ජයවර්ධනපුර සරසවියේ සම්මානිත මහාචාර්ය මාතුළු අඳගම

සැඳුණි සරසවියේ ආචාර්ය සවිතා රාජරත්නම්

කොළඹ සරසවියේ මහාචාර්ය සඳගෝමි කෝපරහේවා

කොළඹ සරසවියේ මහාචාර්ය දුෂ්මන්ත මෙන්ඩිස්

පෙබරවාරි 21 වැනි දිනට යෙදෙන ආන්තර්ජාතික මවුභාෂා දිනය නිමිත්තෙනි

මවු භාෂාව භාවිත කිරීමට ලැබීම ඕනෑම මානව වර්ගයක අයිතියකි!

• සවිනි ඉමල්ෂා

භාෂාමය සංස්කෘතික විවිධත්වය සහ බහු භාෂා භාවිතය ප්‍රවර්ධනය කිරීමේ අරමුණින් අන්තර්ජාතික මවුභාෂා දිනය පෙබරවාරි 21 වැනිදා දින වන සැමරෙයි. ලෝ වැසියන් විසින් භාවිත කරනු ලබන සියලු භාෂා සංරක්ෂණය හා ප්‍රවර්ධනය කිරීමේ අරමුණ ඇතිව සැමරෙන ජාත්‍යන්තර මවු භාෂා දිනය 2021 වර්ෂයේ පෝෂාව වන්නේ බහුභාෂා පෝෂණය අධ්‍යාපනයට හා සමාජයට ඔතඟු ප්‍රවේශයක් යන්තයි. මවු භාෂාව යන්න තුළින්ද ළෙඟ කරලව අවිට හැක්වූවහොත් භාෂාව තමන්ට උපතින් හිමි වන භාෂාව එසේත් නැතිනම් උපතේ සිට සීරුභාවිත කාලයක් තුළ ඉගිලිගිම ඉගෙන ගන්නා බස කරලු වශයෙන් මවු භාෂාව ලෙඟ අර්ථකථනය කළ හැකිය.

ලෝක භාෂා දිනය සැප්තැම්බර් 26 දින සමරනවා. නමුත් ජාත්‍යන්තර මවු භාෂා දිනය සැමරීම පෙබරවාරි 21 දිනට යෙදෙනවා. එය ආරම්භ කළබව 1999 පෙබරවාරි 21 දින දැනුම්දෙන ලද්දේ UNESCO ආයතනය විසිනි. මෙම දිනයේ අරමුණ රටක පවතින පැරණිම භාෂා ආරක්ෂා කිරීම. භාෂාව පෝෂණය කිරීමට අනිවාර්යයෙන් පැරණි සාහිත්‍ය හා සම්ප්‍රදාය අවශ්‍යය වෙනවා. එසේත් නොමැතිව කථන භාෂාවෙන් පමණක්ම මවු භාෂාව පෝෂණය අපහසුයි

ලොව වැඩිපුරම කතා කරන භාෂාව ඉංග්‍රීසි භාෂාව ලෙස හැඳින්වුවත් ඉංග්‍රීසි භාෂාව කතා කරන ජන සංඛ්‍යාව පසුවන්නේ චීනය හෙවැනි ස්ථානයේයි. ලොව වැඩිපුරම කතා කරන භාෂාව චීන භාෂාවයි (මැන්ඩරින්). දෙවැනි ස්ථානය ඔබ වනු ලබන්නේ ස්පාඤ්ඤ භාෂාවටයි. දෙමළ භාෂාව විසි වන ස්ථානයේ පසුවන අතර සිංහල භාෂාවට හිමි කිරීමවන්නේ හැට දෙවන ස්ථානයයි. මෙය ඉතා දුක්ඛිත තත්ත්වයකි. භාෂාවක් ඉදිරියට පවත්වාගෙන යාමේදී වඩාත් වැදගත් වෙනු ලබන්නේ කථනයයි. ලොව භාවිත වන භාෂා පිටට අනුවක් තරම් බහුතර භාෂා ප්‍රමාණයක් ව්‍යවහාර කරන්නේ සමස්ත ලෝක ජනගහනයෙන් සියයට හතරක් තරම් ඉතා සුළු පිරිසකි. ජාත්‍යන්තර භාෂා දිනය සමරනුයේ විශ්ව භාෂා අද මුහුණ පා ඇති අභියෝග හඳුනා ගෙන ඊට විසඳුම් සෙවීමේ අරමුණිනි.

වර්තමාන ලෝකයේ ව්‍යවහාරික භාෂාව පිළිබඳව සිදු කරන ලද පර්යේෂණයකදී දැනට ලෝකය පිළිගත් භාෂා 6912 ක් ව්‍යවහාර වන බව හඳුනා ගෙන තිබේ. එයින් භාෂා දහයක් පමණ වඩාත ජනප්‍රිය භාෂාය. එසේම ව්‍යවහාරයේ පවතින භාෂා තුනෙන් 50% කට වඩා වැඩි ගණනක් ව්‍යවහාරයෙන් අවසන් මිදු භාෂා ලැයිස්තුවට එක් වීමේ අවධානමක් පවතිනි. එවැන් භයානකම කරුණ වන්නේ මෙම භාෂා අතරින් එක් භාෂාවක් සෑම සති දෙකක් තුළ ම ලොවට අහිමි වීමයි.

මේ පිළිබඳව හා මෙවර මවුභාෂා දිනයට සමගාමීව රාජ්‍ය භාෂා කොමිෂන් සභාවේ සභාපති නිහඬකළ ඩී.කනලංකාරිය අදහස් දැක්වූවේ මේ ලෙසිනි.

"මෙවර මවුභාෂා දිනය වශයෙන් ප්‍රකාශ කරලා 2000 දී රටවල් 188ක් ජාත්‍යන්තර වශයෙන් මවුභාෂා දිනය සමරනවා. ඒ අනුව කෙසේ මේ දිනය පෙබරවාරි 21 මවුභාෂා දිනය විදියට ගොඩාක් දේශ. ලංකාව තුළත් විවිධ ජාතීන් කුඩා කණ්ඩායම් වශයෙන් ජීවත් වෙනවා. ඔවුන් ඔවුන්ගේ මවුභාෂාව සවුන්ගේ ගණාත්මකව, ඔවුන්ගේ ඥාතීන් අතර භාවිත කරනවා.

කොළඹ විශ්වවිද්‍යාලයේ සිංහල අංශ ප්‍රධාන මහාචාර්ය සඳගෝමි කෝපරහේවා මෙවර මවුභාෂා දිනය වෙනුවෙන් තම අදහස් දැක්වූයේ මේ ලෙසිනි.

බහුභාෂිකත්වය ලෝකය පුරාම දකින්නට ලැබෙන සංසිද්ධියක්. ඒ රටවල් වලින් වැඩි ප්‍රමාණයක් බහුභාෂිකයි. ඒකාභාෂික සියන රටවල් අද නැහැ. ඒ අතරම තියෙන අතිත් කාරණය තමා ඉංග්‍රීසි වැනි විශ්ව භාෂාවක් ව්‍යාප්ත වෙන නිසා ඒ රටවල සියන මවු භාෂාවලට විශාල බලපෑමක් එල්ල වෙමින් තියනවා, මවුභාෂා දිනයේ තියන වැදගත්කම තමයි ඉංග්‍රීසි වැනි විශ්ව භාෂා හමුවේ මවුභාෂාවට ඇති තර්ජනය.

ස්වදේශීය භාෂා ආරක්ෂා කිරීම, සංරක්ෂණය කිරීම ඒ භාෂාවල සියන කොරතුරු ලේඛනගත කිරීමේ අවශ්‍යතාවක් තියනවා. අද තියෙන විශේෂ කාරණයක් තමා ලංකාව වැනි රටක සිංහල, දෙමළ, රාජ්‍ය භාෂා වශයෙන් භාවිත වුවත් ඉංග්‍රීසි භාෂාව ප්‍රධාන වශයෙන් අපේ අධ්‍යාපනය පරිපාලනයට හා වාණිජ වැනි අංශවල වැඩි බලපෑමක් කිරීම.

යම්කිසි ආකාරයකට මවු භාෂාව අහහැර ඉංග්‍රීසි වැනි භාෂාවක් සම්පූර්ණයෙන් අධ්‍යාපනය මාර්ගය බවට පත් වුණොත් ඒ දැනුම ස්වභාෂා වලින් ප්‍රකාශයට පත් වෙන්නෙ නැහැ, එමෙම තත්ත්වයක් ආවොත් සාමාන්‍ය ජනයාගේ එදිනෙදා කතා බහ පමණක් මවුභාෂාවට සීමා වෙන්න පුළුවන්.

කොළඹ විශ්වවිද්‍යාලයේ ඉංග්‍රීසි අධ්‍යයන අංශයේ මහාචාර්ය දුෂ්මන්ති මෙන්ඩිස් මවුභාෂාව පිළිබඳවත් තම වැදගත්කමත් වෙනස් විදියකට ප්‍රකාශ කළේය. 'මම හිතන විදිහට මේ පාර තේමාව ගොඩක් උචිතයි. මොකද ශ්‍රී ලංකාව බහුභාෂික රටක්.

ශ්‍රී ලංකාවේ ප්‍රධාන භාෂා දෙකක් තියෙනවා. ඒ සිංහල සහ දෙමළ. ඊට අමතරව ඉංග්‍රීසි කතා කරන අයත් ඉන්නවා. ඒ වගේම තවත් භාෂා කුණක් තියෙනවා.

ශ්‍රී ලංකා මැලේ, ශ්‍රී ලංකා පාකුයීසි, ශ්‍රී ලංකාවේ ආදිවාසීන්ගේ භාෂාව. අඩුම ගානේ ලංකාව තුළ මවු භාෂාව කියලා භාෂා 6 කට අයිට කියන්න පුළුවන්. හැබැයි දැන් අධ්‍යාපනය අතින් බලනකොට ලංකාවේ පාසල්වල උගන්වන්නේ ඔය භාෂා හතෙන් කුනක් පමණයි. ඒ සිංහල, දෙමළ, ඉංග්‍රීසි. අනිත් භාෂා පාසල්වල උගන්වන්නේ නැහැ.

මම ඒ එක්කම භාෂා අයිතිවාසිකම් අතින් බලන විට එතනත් උල්ලංඝණය වෙනවා කියලා මම කියනවා. එයාලගේ මවු භාෂාව අපි අනුමත කරන්නේ නැහැ. මවු භාෂාව කියන්නෙ තමන්ගෙ ආත්මේ වගේ. තමන්ගේ සිරිත් විරිත් තමන්ගේ ආගම තමන් කවුද කියන එක මේ ඔක්කොම දේවල් එක්ක බැඳෙන දෙයක්. ඒ නිසා කාගෙහරි මවු භාෂාව අනුමත කරන්නෙ නැත්නම් තමන්ගෙ මවු භාෂාවට තැනක් දෙන්නේ නැත්නම් මගේ හරකය එක භාෂා අයිතීන්ට කරන උල්ලංඝනය කිරීමක්.

කැලණිය විශ්වවිද්‍යාලයේ වාග්විද්‍යා අධ්‍යයන අංශයේ ආචාර්ය කවීතා රාජරත්නම් මවු භාෂාව වෙනුවෙන් සිය හඬ අවදි කළේ මේ ලෙසය.

ලෝක භාෂා දිනය සැප්තැම්බර් 26 දින සමරනවා. නමුත් ජාත්‍යන්තර මවු භාෂා දිනය සැමරීම පෙබරවාරි 21 දිනට යෙදෙනවා. එය ආරම්භ කළබව 1999 පෙබරවාරි 21 දින දැනුම්දෙන ලද්දේ UNESCO ආයතනය විසින්. මෙම දිනයේ අරමුණ රටක පවතින පැරණිම භාෂා ආරක්ෂා කිරීම. භාෂාව පෝෂණය කිරීමට අනිවාර්යයෙන් පැරණි සාහිත්‍ය හා සම්ප්‍රදාය අවශ්‍යය වෙනවා.

එසේත් නොමැතිව කථන භාෂාවෙන් පමණක්ම මවු භාෂාව පෝෂණය අපහසුයි

මේ දෙයට මම යෝජනා කරන විසඳුම වන්නේ මවු භාෂාව හා දෙවන භාෂාව සෑම දරුවෙකුටම හොඳින් ඉගෙන ගන්න ඕනි. මක්නිසාද යත් මවු භාෂාව ඉතා නිවැරදිව අවබෝධ කර ගත් විට අනෙක් භාෂාවල අන්තිවාරමද පැහැදිලිව අවබෝධ වෙනවා.

ඉහත කරුණු සමඟ මඳක් සිතා බලන විට ඔබ සිතන්න මවුභාෂාවට හිමිවන තැන සහ මවුභාෂාව අද තිබෙන තැන. ජාතිය සිංහල යැයි ආඩම්බරයෙන් කියනවා සේම භාෂාව සිංහල යැයිද ඔබ ආඩම්බරයෙන් කියුතුය. ඉතින් ඔබ ඔබගේ සිතින් මඳක් අසන්න; ඔබ ඔබේ භාෂාවට දී තිබෙන තැන.

பகுதி III

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

நிதிக் கூற்றுக்கள்

2021

ஜனஜயசிட்டி கட்டிடம், 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரிய.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	**குறிப்பு**	**2021**	**2020**
பொருட் பதிவேடு	**1**	**292,900.00**	**292,900.00**
முற்கொடுப்பனவுகள்	**2**	22,698.00	-
ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்	**3**	4,018,826.94	3,350,470,48
இருப்புப் பொருள்		103,500.00	-
எழுதுகருவிகள் (இருப்பு)		474,019,74	818,090.90
உப கட்டுநிதி தீர்ப்பனவு		-	193,530.75
நிதி மற்றும் நிதிக்கு சமனான		5,877,971.80	1,805,438.02
விசேட முற்பணம்		2,000.00	2,000.00
விழா முற்பணம்		7,400.00	7,400.00
ஏனைய சொத்துக்கள்		14,950.00	-
		10,814,266.48	**6,469,830.15**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	4	**7,987,641.77**	**5,415,802.01**
மொத்தச் சொத்துக்கள்		**18,801,908.25**	**11,885,632.16**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய	5	4,145,642.32	305,561.84
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள்		136,014.00	313,214.00
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	**6**	**3,952,612.77**	**3,562,360.27**
மொத்தப் பொறுப்புக்கள்		**8,234,269.09**	
தேறிய பொறுப்புக்கள்		**10,567,639.16**	**7,704,496.05**
தேறிய சொத்துக்கள்/சம பங்குகள்			
திரட்டிய மிகை/நிலுவை	**7**	**10,567,639.16**	**7,704,496.05**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.

நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பில் ஆணைக்குழு பொறுப்புக் கூறும். ஆணைக்குழுவிற்காக மற்றும் அதன் சார்பாக ஒப்பமிடப்பட்டது.

.....	.....	.....
(தலைவர்)	**(ஆணைக்குழு அங்கத்தவர்)**	**ஆர்.யூ.ஹெட்டிதந்திரிகே (கணக்காளர் - பதிற்கடமை)**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2021	2020
வருமானங்கள்			
திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் ஏற்பாடுகள்		28,122,000.00	21,718,000.00
வருமானங்கள்		1,100.00	112,553.99
ஏனைய வருமானங்கள்	8	167,615.61	111,390.77
மொத்த வருமானங்கள்		**28,290,715.61**	**21,941,944.76**
செலவினங்கள்			
சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள்	9	16,000,549.20	15,616,236.27
விநியோகம் மற்றும் நுகர்வுப் பயன்கள்	10	1,949,732.52	1,838,679.25
பெறுமானத் தேய்வுகள்		1,470,158.63	3,002,980.64
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு	11	1,113,061.47	566,452.47
பயன்பாடுகள் மற்றும் பிற சேவைகள்	12	5,231,318.44	1,159,128.69
ஏனைய செலவினங்கள்	13	593,940.39	133,800.00
அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்	14	1,129,431.10	1,210,064.88
கணக்காய்வுக் கட்டணங்கள்		250,000.00	250,000.00
மொத்தச் செலவினம்		**27,738,191.75**	**23,777,342.20**
காலப்பகுதிக்கான மிகை/(நிலுவை)		**552,523.86**	**(1,835,397.44)**

நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்களானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலங்ககங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய சொத்துக்கள்/உரிமைகளின் மாற்றங்கள் குறித்த கூற்று

	திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள்	திரட்டிய நிதியம்	வருடத்திற்கான மிகை/(நிலுவை)	வேறு	மொத்தம்
2020.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி		9,539,893.49			9,539,893.49
திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகள்			(1,538,397.44)		(1,538,397.44)
2020 ஆம் ஆண்டிற்கான மிகை/ (நிலுவை)					
2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி		9,539,893.49	(1,538,397.44)		7,704,496.05
2021 சனவரி 01 ஆம் திகதியன்று மீதி		**7,704,496.05**			**7,704,496.05**
திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகள்	1,745,000.00				1,745,000.00
கணனி மீள் கணக்கிடல்				454,900.00	454,900.00
அலுவலகத் தளபாடங்கள் மீள் கணக்கிடல்				181,250.00	181,250.00
பொறி மற்றும் உபகரணங்கள் மீள் கணக்கிடல்				108,500.00	108,500.00
2021 ஆம் ஆண்டிற்கான மிகை/ (குறை)			552,523.86		552,523.86
தீர்க்கப்படாத உப கட்டுநிதி சீராக்கல்				(179,030.75)	(179,030.75)
2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	1,745,000.00	7,704,496.05	552,523.86	565,619.25	10,567,639.16

நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்களானது இந்நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலங்ககங்கள் கழித்தலைக் குறிக்கின்றன.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப்பாய்ச்சற் கூற்று

	2021 ரூ.	2020 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான நிதிப் பாய்ச்சல்		
மிகை/(நிலுவை)	552,523.86	(1,835,397.44)
நடைமுறை அல்லா அசைவுகள்		
வாகனங்களை அப்புறப்படுத்துவதன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம்	-	-
பணிக்கொடை	390,252.50	439,615.37
தேய்மானம்	1,470,158.63	3,002,980.64
முந்தைய ஆண்டின் சீராக்கல்		
இடர்க் கடன் மீதி சீராக்கல்	-	-
நடைமுறை அல்லா அசைவுகளின் பின்னர் நிதிப் பிரவாகம்	2,412,934.99	1,607,198.57
செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
முற்கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(22,698.00)	-
பொருட் பதிவேடுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	-	94,500.00
ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(668,35646)	34,105.67
இருப்புப் பொருட்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(103,500.00)	79,674.35
எழுதுகருவிகளின் (இருப்பு) (அதிகரிப்பு)/வீழ்ச்சி	344,071.16	153,288.31
ஏனைய சொத்துக்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(14,950.00)	614,800.00
உப கட்டுநிதிகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	-	-
விசேட முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	-	3,200.00
தீர்வு செய்யப்படாத முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	-	-
விழா முற்பணங்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	-	10,000.00
செலுத்த வேண்டிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி	3,804,080.48	(1,325,427.01)
உப கட்டுநிதி தீர்ப்பனவுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	14,500.00	(14,500.00)
செலுத்த வேண்டிய கணக்காய்வுகளின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி	(177,200.00)	4,360.00
	3,211,947.18	(345,998.68)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல்	**5,624,882.17**	**1,261,199.89**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப் பாய்ச்சல்		
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	**(3,297,348.39)**	**(126,750.00)**
மோட்டார் வாகனங்களை அப்புறப்படுத்தல்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல்	(3,297,348.39)	(126,750.00)
நிதி நடவடிக்கைகளிலிருந்து நிதிப் பாய்ச்சல்		
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதனக்	**1,745,000.00**	**-**

கொடைகள்		
நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப் பாய்ச்சல்	1,745,000.00	-
நிதி மற்றும் சமனான பெறுமதிகளின் தேறிய (அதிகரிப்பு)/வீழ்ச்சி	**4,072,533.78**	**1,134,449.89**
வருடத்தின் ஆரம்பத்தில் நிதி மற்றும் சமனான பெறுமதிகள்	**1,805,438.02**	**670,988.13**
வருடத்தின் இறுதியில் நிதி மற்றும் சமனான பெறுமதிகள்	**5,877,971.80**	**1,805,438.02**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள்

---

1. அறிக்கையிடும் நிறுவனம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான நியதிச்சட்ட நிறுவனமாகும் என்பதுடன், அது அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடங்கும். ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் "ஜனஜயசிட்டி" கட்டிடம், 09 ஆம் மாடி, நாவல வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ளது.

1.1 கொள்கைசார் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மை

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்தலே ஆணைக்குழுவின் கொள்கைசார் செயற்பாடாகும்.

1.2 ஊழியர் எண்ணிக்கை

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை 20 ஆக இருந்ததோடு, 2020 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 42 ஆகும்.

1.3 நிதிக் கூற்றுக்களின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் குழு பொறுப்புக் கூறும்.

2 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

இந்நிதிக் கூற்றுக்களானது நிதி செயலாற்றுகையின் கூற்று, நிதிப் பிரவாகக் கூற்று, சம பங்கு (Equity) மாற்றத்தின் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் போன்ற விடயங்களைக் கொண்டமைந்துள்ளன. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம், நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் என்பன இணைந்து பணிக்கப்பட்டுள்ளவாறும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்புடைய அரச சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 மதிப்பீட்டு அடிப்படை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடை தவிர்ந்த வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் பணவீக்கக் காரணிகளுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

2.3 சமர்ப்பிக்கப்படும் நாணய வகை

இலங்கை ரூபாய்களில் நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படும்.

மதிப்பீடுகளில் குறிப்பிடத்தக்க அளவிலான தகவல்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் இனங்காணப்படும் பெறுமானங்களின் அடிப்படையில் நிச்சயமற்ற வகையில் பெரிதும் கவனிக்கத்தக்க தாக்கங்களாவன பின்வரும் விடயங்களாகும்.

ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் (குறிப்பு 9)
சொத்துக்கள் சேதம் (குறிப்பு 3.1)

2.4 பொருள் சார்ந்த தன்மை மற்றும் திரட்டல்

ஒவ்வொரு வகைக்குமுரிய சமமான உருப்படிகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சமமற்ற வகைகளின் அல்லது பணிகளின் உருப்படிகள் அருவங்களே தவிர வெவ்வேறாகக் காட்டப்படவில்லை.

2.5 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

நடைமுறை வருடத்தில் சமர்ப்பிப்பதன் பொருட்டு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உடன்பாட்டைக் காட்டும் வகையில் ஒப்பீட்டுத் தகவல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3 தனித்துவமான கணக்கீட்டு நடைமுறைகள்

கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகள் மாற்றமடையாது என்பதுடன், அவை நிரந்தரமாக நிறுவனத்தினால் ஏற்புடையனவாகக் கொள்ளப்பட்டுள்ளன.

3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

இனங்காணல் மற்றும் அளவிடல்
ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன அவை கொள்வனவு செய்யப்பட்ட விலை அல்லது அதன் மீதான வேறு ஏதேனும் இடைநேர்விளைவான செலவினங்களின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சொத்துக்கள், பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும் குறைந்த திரட்டிய தேய்மான செலவினத்தில் காட்டப்படும்.

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஆகுசெலவு, சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேரடியாக அறவிடக் கூடிய செலவினத்துடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொது திறைசேரியினால் அல்லது வேறு ஒரு அரச நிறுவனத்தினால் சொத்துக்கள் மாற்றம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் குறித்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட செலவினம் அல்லது மீண்டும் கணக்கிடப்படும் தொகையின் மீது அச் சொத்துக்களைப் பயன்படுத்துவதாயின், அப்போது குறித்த சொத்துக்கள் ஆகுசெலவாகக் குறிப்பிடப்படும்.

முழுமையாகத் தேய்மானமடைந்தும் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்படும் சொத்துக்கள் எனினும் அவை ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுமாயின், அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை மதிப்பிட முடியாது என்பதனால் அவை மீளவும் கணக்கிடப்படும் அல்லது அழிக்கப்படும் (impair). எவ்வாறாயினும் இவ்வாறாக சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பில் வெளிப்படுத்தப்படும்.

3.2 மதிப்பீடுகளின் பயன்பாடு மற்றும் தீர்மானங்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் அனுமானித்தல், கணக்கீட்டு நடைமுறைகளை ஏற்புடையதாக்கிக் கொள்கையில் ஏற்படும் தாக்கங்கள், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் முதலானவை குறித்து முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். நிலைமைகளின் கீழ் உடன்பட முடியுமென நம்புகின்ற வரலாற்று அனுபவங்கள் மற்றும் பல்வேறு வகையான வேறு காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன அமைகின்றன. உண்மையான முடிவுகள் மதிப்பிடப்பட்ட தொகையால் வேறுபட முடியும்.

பெறுமானத் தேய்வு

முழு வருடத்திற்குமான பெறுமானத் தேய்வானது குறித்த உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே வழங்கப்படும் என்பதோடு, 2008 ஆம் வருடத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிக்கு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அகற்றல்களுக்குப் பெறுமானத் தேய்வு வழங்கப்படவில்லை. 2008 ஆம் வருடத்தின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட திகதி/உருப்படி அகற்றப்பட்ட மாதம் என்பவற்றின் அடிப்படையிலேயே பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும்.

இவ் வருடத்திற்கு மற்றும் ஒப்பீட்டு வருடத்திற்கான பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு.

பொறிகள் மற்றும் இயந்திரங்கள்	5 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	4 வருடங்கள்
கணனி	4 வருடங்கள்
குளிரூட்டிகள்	5 வருடங்கள்
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	10 வருடங்கள்

3.3 பொருட் பட்டியல்

பொருட் பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் நிகர தேறத்தக்க பெறுமதிகளினால் கணிப்பிடப்பட்டுள்ளது. நிகர தேறத்தக்க பெறுமதி என்பது, சொத்துக்களை விற்றுப் பெறக்கூடிய பணத்திலிருந்து விற்பனைச் செலவினத்தைக் கழித்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுமானமாகும். பொருட் பட்டியலானது ஆணைக்குழுவின் கூற்றுக்களைக் கொண்டமைந்தது. இக் கூற்றுக்களின் தேறத்தக்க பெறுமதி என்பது, விலை நிலையானதாக இருக்கும் போது விற்பனை விலையாகும். இது தொடர்பில் ஏற்பதற்கு விற்பனைக் கிரயம் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

3.3 முற் கொடுப்பனவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள்

முற் கொடுப்பனவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் என்பன ஏற்கப்படும் உண்மைக் கிரயத்தின் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்க நேரிடும் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

3.5 ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்

ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொடர்பில் கிரயத்தில் குறிப்பிடப்படும். அனுமதி வழங்கப்படாத காரணத்தினால் தகுதியற்ற அல்லது மீளப் பெற முடியாத கடன் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. தகுதியற்ற அல்லது மீளப் பெற முடியாத கடன் தொடர்பான விபரங்களின் வெளிப்படுத்தலாக நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.6 பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைய பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் கணக்கிடப்படும். தற்போதிருக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு வருடத்திற்குரிய பணிக்கொடையாகத் தமக்கு உரித்தான இறுதி மாதத்தின் அடிப்படைச் சம்பளத்தின் அரைவாசியாகும் வகையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

3.7 வருமானம்

மீண்டுவரும் செலவினங்களின் பொருட்டு பொது திறைசேரியினால் விடுவிக்கப்படும் முற்பணக் கட்டுநிதியானது வருமானமாக இனங்காணப்பட்டது. மூலதன செலவினங்களுக்கு முற்பணக் கட்டுநிதி அல்லது மூலதன செலவினங்களின் நேரடி மாற்றல்கள் ஆணைக்குழுவின் மொத்த நேரடி மூலதனமாக இனங்காணப்பட்டது.

3.8 செலவினம்

ஏற்க நேரிடும் கிரயத்தின் நேரடி தொடர்பு மற்றும் வருமானத்தின் விசேடமான உருப்படியின் வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிச் செயலாற்றுகைக் கூற்றின் செலவினங்கள் இனங்காணப்படும். ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் பொருட்டு ஏற்கப்படும் அனைத்து செலவினங்கள் அதாவது, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கையில் ஏற்க நேரிடும் செலவினங்கள் மற்றும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செலவினங்கள் முதலான அனைத்து செலவினங்களும் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.9 நிதிப் பாய்ச்சற் கூற்று

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சற் கூற்றுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. பொருட் பதிவேடு

கூற்றுக்கள்

கூற்றின் பெயர்	**2021**	**2020**
	ரூ.	**ரூ.**
ஆங்கில சிங்கள கலைச்சொல்லகராதிகள்	53,050.00	53,050.00
தமிழ் ஆங்கில கலைச்சொல்லகராதிகள்	24,390.00	24,390.00
தமிழ் விசேட கலைச்சொல்லகராதிகள்	180.00	180.00
40 மணித்தியால குறுகிய கால பாடநெறி புத்தகம்	215,280.00	309,780.00
மொத்தம்	**292,900.00**	**292,900.00**

2. முற்கொடுப்பனவுகள்

	2020	**2019**
நிழற்பிரதி இயந்திரம் - சேவை உடன்படிக்கை	19,458.00	-
தொலைநகல் இயந்திரம் - சேவை உடன்படிக்கை	3,240.00	-
	22,698.00	-

3. ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் முற்பணம்

கிரயம் அல்லது மீளக் கணக்கிடப்பட்ட பெறுமதி

வகை	**2021.01.01 ஆம் திகதியன்று மீதி**	**கூட்டல்**	**மூலதன அறவீடுகள்**	**2021.12.31 ஆம் திகதியன்று மீதி**
விழா முற்பணம்	7,400.00	70,000	70,000.00	7,400.00
இடர்க் கடன்	3,350,470.00	1,249,330.46	580,974.00	4,018,826.94
விசேட முற்பணம்	2,000.00	44,000.00	44,000.00	2,000.00
	3,359,870.48	**1,363,330.46**	**694,974.00**	**4,028,226.94**

4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

கிரயம் அல்லது மீளக் கணக்கிடப்பட்ட பெறுமதி

வகை	**2021.01.01 ஆம் திகதியன்று மீதி**	**கூட்டல்/மீள மதிப்பிடல்**	**முறைகேடுகள்**	**2021.12.31 ஆம் திகதியன்று மீதி**
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	0	2,428,510.89	-	2,428,510.89
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் - (மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்) (WIP)	0	868,837.50	-	868,837.50
குளிரூட்டிகள்	275,814.54	-	275,814.54	-
கணனிகள்	3,671,866.00	454,900.00	1,528,016.00	2,598,750.00
மோட்டார் வாகனங்கள்	6,365,000.00	-	-	6,365,000.00
பொறிகள் மற்றும் இயந்திரங்கள்	347,309.75	108,500.00	347,309.75	108,500.00
அலுவலக தளபாடங்கள்	7,168,632.68	181,250.00	1,135,775.88	6,214,106.80
அலுவலக உபகரணங்கள்	761,725.00	-	-	761,725.00
மொத்தக் கிரயம் அல்லது மீளக் கணக்கிடப்பட்ட பெறுமதி	**18,590,347.97**	**4,041,998.39**	**3,286,916.17**	**19,345.430.19**
திரண்ட தேய்மானம்				
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	0	101,187.95	0	101,187.95
கணனிகள்	2,467,211.42	649,687.50	1,528,016.00	1,588,882.92
மோட்டார் வாகனங்கள்	6,365,000.00	-	-	6,365,000.00
பொறிகள் மற்றும் இயந்திரங்கள்	347,309.75	21,700.00	347,309.75	21,700.00
அலுவலகத் தளபாடங்கள்	275,814.54	-	275,814.54	-
அலுவலக உபகரணங்கள்	3,640,129.83	621,410.68	1,135,775.88	3,125,764.63
மோட்டார் வாகனங்கள்	79,080.42	76,172.50	-	155,252.92
மொத்தத் தேய்மானம்	**13,174,545.96**	**1,470,158.63**	**3,286,916.17**	**11,357,788.42**
தேறிய புத்தகப் பெறுமதி	**5,415,802.01**			**7,987,641.77**

வெளிப்படுத்தல்கள்

1. ரூ. 275,814.54 பெறுமதியான குளிரூட்டியானது 2020 ஆம் ஆண்டில் முற்றிலும் தேய்மானமடைந்துள்ளதுடன், குறித்த இயந்திரம் 2021.07.01 ஆம் திகதி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்திற்கு (ONUR) மாற்றப்பட்டுள்ளது.

2. ரூ. 1,135,775.88 பெறுமதியான அலுவலகத் தளபாடங்கள், ரூ.1,528,016.00 பெறுமதியான கணனிகள், ரூ.347,309.75 பெறுமதியான பொறிகள் மற்றும் இயந்திரங்கள் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதோடு, அவை இடைநேர்விளைவாக ரூ.181,250.00, ரூ.154,900.00 மற்றும் ரூ.108,500.00 ஆகும் வகையில் மீளக் கணக்கிடப்பட்டுள்ளன.

3. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் சொத்துக்கள் குறியாக்க முறைமையொன்று 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதன் மூலம் தேய்மானமடைந்த சொத்துக்கள் இனங்காணப்பட்டு மீளக் கணக்கிடப்பட்டுள்ளன.

4. கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களுடன் அலுவலக உள்ளகப் பிரிவுபடுத்தல் வேலைகளுக்கான சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி உள்ளடங்குவதுடன், மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளுக்காக (WIP) அலுவலக வளாகத்தில் நிர்மாணிக்கப்படும் கழிவறை உள்ளடங்கும். எவ்வாறாயினும் இக் கட்டிடமானது ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு உரித்தானது என்பதால் இம் மூலதனச் செலவினங்களை உடன்படக் கூடியதொரு அடிப்படையில் மாதாந்த வாடகைத் தொகையிலிருந்து அறவிடுவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

5. அலுவலக வளாகத்தை நீண்ட கால வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழு எதிர்பார்ப்பதால் இக் கழிவறை மற்றும் அலுவலக உள்ளகப் பிரிவுபடுத்தல்களின் ஆயுட்காலமானது 10 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

6. மோட்டார் வாகனங்களின் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதால் 2022 ஆம் ஆண்டில் மீளக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

5. செலுத்த வேண்டிய

		2021	2020
		ரூ.	ரூ.
2841	- எழுதுகருவிகள்	24,728.30	24,160.00
2811	- சம்பளம்	17,073.55	6,500.00
2883	- தொலைபேசி கட்டணப்பட்டியல்கள்	21,524.21	34,055.40
2886	- சுத்திகரிப்பு சேவைகள்	90,030.00	39,055.90
2887	பாதுகாப்பு சேவைகள்	100,440.00	-
2464	கணனி பராமரிப்பு	-	10,000.00
2861	கட்டிட பராமரிப்பு	236,237.07	-
2849	ஏனைய	-	22,000.00
2815	- மேலதிக நேரக் கொடுப்பனவு	22,604.45	64,496.54
2540	- செலுத்த வேண்டிய வைப்புக்கள்	85,373.16	3,250.00
2831	- போக்குவரத்துச் செலவுகள்	1,050.00	2,100.00
3302	- ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பரீட்சைகள்	347,383.39	-
2882	வாடகை	1,821,600.00	-
2201	கட்டிடம்	1,291,798.13	-
3042	அச்சு	-	99,738.00
3305	பணிப்பாளர் சபை செலவுகள்	86,400.00	-
		4,145,642.32	**305,561.84**

6. பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்

	2021	2020
	ரூ.	ரூ.
முன் கொண்டு வந்த மீதி	3,562,360.00	3,122,744.90
வருடத்தினுள் கூட்டல்கள்	390,252.50	439,615.37
வருடத்தினுள் பணிக்கொடை கொடுப்பனவுகள்	-	-
	3,952,612.77	

7. ஒட்டுமொத்த நிதியங்கள்

	2021	2020
	ரூ.	ரூ.
	7,704,496.05	9,539,893.49
(+) முந்தைய வருடத்தின் சீராக்கல்களுக்கு முன்னர் முன் கொண்டு வந்த மீதி		
மூலதனச் செலவினங்களுக்கு திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற தொகை	1,745,000.00	-
மிகைக்கு/(பற்றாக்குறைக்கு) முன்னர் ஒட்டுமொத்த நிதியம்	9,449,496.05	9,539,893.49
வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை)	552,523.86	(1,835,397.44)
கணனி மீளக் கணக்கிடல்	454,900.00	-
அலுவலகத் தளபாடங்கள் மீளக் கணக்கிடல்	181,250.00	-
பொறிகள் மற்றும் இயந்திரங்கள் மீளக் கணக்கிடல்	108.500.00	-
தீர்க்கப்படாத உப கட்டுநிதிகளை திருத்தம் செய்தல்	(179,030.75)	-
		7,704,496.05

8. ஏனைய வருமானங்கள்

	2021	2020
	ரூ.	ரூ.
ஊழியர் கடன் வட்டி	167,615.61	111,390.77
நானாவித வருமானங்கள்	-	
	167,615.61	**111,390.77**

9. சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர்களுக்கான நன்மைகள்

	2021	2020
	ரூ.	ரூ.
சம்பளம் மற்றும் வேதனம்	10,873,878.89	10,705,229.36
ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு	1,416,690.67	1,456,094.71
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	352,568.61	364,023.68
மேலதிக நேர	835,591.53	358,773.15
சம்பளக் கொடுப்பனவுகள்	2,131,567.00	2,292,500.00
பணிக்கொடைக் கொடுப்பனவு செலவினம்	390,252.50	439,615.37
	16,000,549.20	**15,616,236.27**

10. வழங்கல் மற்றும் நுகர் பொருட்கள்

	2021	2020
	ரூ.	ரூ.
எழுதுகருவிகள்	611,934.57	536,013.30
சீருடைகள்	8,000.00	20,000.00
பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்கள்	11,960.00	1,470.00
எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	776,790.00	296,774.60
வழங்கல் மற்றும் நுகர்வு	187,126.00	734,724.35
ஏனைய - 2849	353,921.95	249,697.00
	1,949,732.52	**1,838,679.25**

11. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு

	2021	2020
	ரூ.	ரூ.
அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	84,789.49	47,607.75
கணனி பராமரிப்பு	79,380.00	108,933.50
மோட்டார் வாகன பராமரிப்பு	659,392.90	209,774.40
குளிரூட்டிகள் பராமரிப்பு	18,500.00	-
கட்டிட பராமரிப்பு	236,237.07	-
காப்புறுதி மற்றும் உரிமங்கள்	34,762.01	200,136.82
	1,115,061.47	**566,452.47**

12. பயன்பாடுகள் மற்றும் பிற சேவைகள்

	2021	2020
	ரூ.	ரூ.
தொலைபேசி மற்றும் இணையம்	478,995.85	426,077.38
கட்டிட வாடகை	3,035,0000.00	-
பாதுகாப்பு சேவைகள்	620,460.00	-
சுத்திகரிப்பு சேவைகள்	1,066,862.59	658,051.31
தபாற் கட்டணம்	30,000.00	75,000.00
	5,231,318.44	**1,159,128.69**

13. பயன்பாடுகள் மற்றும் பிற சேவைகள்

	2021	2020
	ரூ.	ரூ.
ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பரீட்சைகள்	347,383.39	94,500.00
நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்களுக்கான செலவினம்	-	39,300.00
போக்குவரத்து செலவினம் - உள்நாடு	51,557.00	
2859 – ஏனைய போக்குவரத்துக்கள்	195,000.00	
போக்குவரத்து செலவினம் - வெளிநாடு	-	-
	593,940.39	**133,800.00**

14 அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

	2021	2020
	ரூ.	ரூ.
பயிற்சிகள்	-	18,000.00
செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள்	415,515.00	598,000.00
பணிப்பாளர் குழுக் கூட்ட செலவினம்	236,350.00	118,265.00
பிற - 3070	132,566.10	94,456.88
விளம்பரங்கள்	-	278,515.00
அச்சீடு	345,000.00	99,738.00
வெளிக்களப் பயணங்கள்	-	3,000.00
	1,129,431.00	**1,210,064.88**

நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடைய ஏனைய ஆவணங்கள்

மூலதனச் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடைகள்

2021.01.01 ஆம் திகதியன்று மீதி	(204,412.98)
2021 வருடத்தில் மூலதனச் செலவினத்திற்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடைகள்	1,745,000.00
2021 வருடத்தின் மூலதனச் செலவினம்	**1,540,587.02**
2021.12.31 ஆம் திகதியன்று மீதி	2,005,550.26
	(464,963.24)

மீண்டுவரும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடைகள்

2021.01.01 ஆம் திகதியன்று மீதி	1,805,438.02
2021 வருடத்தில் மீண்டுவரும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடைகள்	28,122,000.00
	29,927,438.02
	24,794,863.69

2021 வருடத்தில் மீண்டுவரும் செலவினங்கள்	
ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணம்	1,363,330.46
2021.12.31 ஆம் திகதியன்று மீதி	**3,769,243.87**
ஏனைய நிதிசார் பெறுவனவுகள்	**2,108,727.93**
2021.12.31 ஆம் திகதியன்று மீதி	**5,877,971.80**

2021.12.31 ஆம் திகதியன்று கடன்கொடுத்தோரின் ஆவணம்

செலவுத் தலைப்பு இலக்கம்	விபரம்	தொகை	
2811	ஆர்.யூ.ஹெட்டிதந்திரிகே	10,096.55	
	கே.ஏ.டிலான்	6,977.00	**17,073.55**
2815	எச்.பி.ஆனந்த பிரேமலால்	915.53	
	டீ.எம்.நிசாந்த காமினி	21,688.92	**22,604.45**
2831	எச்.பி.ஆனந்த பிரேமலால்	350.00	
	டீ.எம்.நிசாந்த காமினி	700.00	**1,050.00**
2841	இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம்	14,278.30	
	சதர்ன் மார்க்கட்டிங்	10,450.00	**24,728.30**
2883	இலங்கை டெலிகொம்	16,503.25	
	மொபிட்டெல் (பிரைவேட்) லிமிட்டட்	3,526.23	
	டயலோக் ஆசியாட்டா பிஎல்சீ	1,494.73	**21,524.21**
2886	சஷீ ஏசியா (பிரைவேட்) லிமிட்டட்	90,030.06	**90,030.96**
2887	ரக்னா ஆரக்சக்க லங்கா (பிரைவேட்) லிமிட்டட்	100,440.00	**100,440.00**
3302	இலங்கை பரீட்சைகள் திணைக்களம்	347,393.39	**347,383.39**
3305	ஆர்.விஜயலட்சுமி	10,800.00	
	வசந்த ஏக்கநாயக்க	10,800.00	
	கவிதா ராஜரட்ணம்	10,800.00	
	வை.ரதிராணி	10,800.00	
	எச்.எஸ்.கோப்பரஹேவா	10,800.00	
	துஷ்யந்தி மெண்டிஸ்	10,800.00	
	விஜேரத்ன திசாநாயக்க	10,800.00	**86,400.00**
2201	சஹரா கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டட்	654,650.63	**654,650.63**
2201	டீ.எஸ்.டீ. கன்ஸ்ட்ரக்ஷன்	637,147.50	**637,147.50**
2882	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை	2,057,237.07	**2,057,237.07**
	மொத்தம்	**4,060,269.16**	**4,060,269.16**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு
ஆம் திகதியன்று மீதி சரிபார்ப்பு

2600	வருமானம்		1,100.00
2610	அரச நன்கொடைகள் - எரிபொருள்		1,745,000.00
2620	அரச நன்கொடைகள் - மீண்டுவரும்		28,122,000.00
2675	கடன் தவணை (முற்பணம்)		70,000.00
	கடன் தவணை (இடர்)		580,974.00
	கடன் வட்டி (விசேட முற்பணம்)		44,000.00
2680	கடன் வட்டி		167,615.61
2700	உப கட்டுநிதி தீர்ப்பனவு		1,202,175.00
	செலுத்த வேண்டிய வைப்புக்கள்	31,500.00	113,623.16
	சம்பள மிகை		11,363.32
	2021.01.01 ஆம் திகதியன்று சொத்து,பொறி மற்றும் உபகரணங்கள்		
2200	பொறி மற்றும் உபகரணங்கள்	347,309.75	
2203	அலுவலகத் தளபாடங்கள்	7,168,632.68	
2202	அலுவலக உபகரணங்கள்	761,725.00	
2204	கணனி	3,671,866.00	
2206	மோட்டார் வாகனம்	6,365,000.00	
2203	குளிரூட்டிகள்	275,814.54	
	ஏனைய சொத்துக்கள்	0.00	
	2021.01.01 ஆம் திகதியன்று தேய்மானத்திற்கான ஏற்பாடுகள்		
	பொறி மற்றும் உபகரணங்கள்		347,309.75
	அலுவலகத் தளபாடங்கள்		3,640,129.83
	அலுவலக உபகரணங்கள்		79,080.42
	மோட்டார் வாகனம்		6,365,000.00
	கணனி		2,267,211.42
	குளிரூட்டிகள்		275,814.54
2207	இருப்புப் பொருள்	103,500.00	
2208	ஏனைய சொத்துக்கள்	14,950.00	
2310	பொருட் பட்டியல்	292,900.00	
	2021.01.01 ஆம் திகதியன்று உப கட்டுநிதி தீர்த்தல்	193,530.75	
	2021.01.01 ஆம் திகதியன்று எழுதுகருவிகளின் இருப்பு	818,090.90	
	2021.01.01 ஆம் திகதியன்று ஊழியர்களுக்கு வழங்கும் கடன்	3,359,870.48	
2311	இடர்க் கடன்	1,249,330.46	
2334	விசேட முற்பணம்	44,000.00	
2332	விழா முற்பணம்	70,000.00	
2342	முற்பணம்	1,187,675.00	
2400	2021.01.01 ஆம் திகதியன்று திரட்டிய நிதி		7,704,496.05
	2021.01.01 ஆம் திகதியன்று பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்		3,562,360.27
	2021.01.01 ஆம் திகதியன்று கணக்காய்வு கட்டணங்களுக்கான ஏற்பாடுகள்		313,214.00

2201	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	2,005,350.36	
2811	சம்பளம் மற்றும் வேதனம்	10,874,668.66	
2812	ஊழியர் சேமலாப நிதியம் (EPF)	1,416,690.67	
2813	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ETF)	352,568.61	
2815	மேலதிக நேர	877,483.62	

2817	கொடுப்பனவுகள்	2,131,567.00	
2831	போக்குவரத்து செலவினம் - உள்நாடு	52,607.00	
2840	வழங்கல்	136,751.00	
2841	எழுதுகருவிகள்	267,295.11	
2842	நுகர்பொருட்கள்	50,375.00	
2843	சீருடை	8,000.00	
2844	பத்திரிகை மற்றும் பருவ இதழ்கள்	11,960.00	
2849	வேறு	375,921.95	
2851	எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	776,790.00	
2852	காப்புறுதி மற்றும் உரிமம்	34,762.01	
2859	வேறு – போக்குவரத்து	195,000.00	
2862	அலுவலக உபகரண பராமரிப்பு	107,487.49	
2864	கணனி பராமரிப்பு	89,380.00	
2865	குளிரூட்டிகள் பராமரிப்பு	18,500.00	
2866	மோட்டார் வாகன பராமரிப்பு	659,392.90	
2882	வாடகை	1,314,000.00	
2883	தொலைபேசி மற்றும் இணையம்	491,527.04	
2886	சுத்திகரிப்பு சேவைகள்	1,016,094.43	
2887	பாதுகாப்பு சேவைகள்	520,020.00	
2888	தபாற் கட்டணம்	30,000.00	
3042	அச்சீடு	444,738.00	
3050	செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள்	415,515.00	
3070	வேறு	132,566.10	
3305	பணிப்பாளர் சபை கூட்ட செலவினம்	149,950.00	
2899	கணக்காய்வு கட்டணங்கள்	427,200.00	
	பணம் மற்றும் வங்கி மீதி	5,877,971.80	
	2021.01.01 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய		
	எழுதுகருவிகள் (2841)		24,160.00
	சம்பளம் மற்றும் வேதனம்		6,500.00
	வைப்புக்கள்		3,250.00
	செலுத்த வேண்டிய தொலைபேசி பட்டியல்கள்		34,055.40
	சுத்திகரிப்பு சேவைகள்		39,261.90
	ஏனைய செலுத்த வேண்டிய - 2849		22,000.00
	அச்சீடு (3042)		99,738.00
	போக்குவரத்து செலவினம் (2831)		2,100.00
	செலுத்த வேண்டிய மேலதிக நேர		64,496.54
	செலுத்த வேண்டிய கணனி பராமரிப்புக்கள்		10,000.00
	மொத்தம்	**57,118,029.21**	

தேய்மானம்

குளிரூட்டிகள்

20%

ரூ.275,814.54 பெறுமதியான குளிரூட்டிகள் 2020 ஆம் ஆண்டில் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதோடு, குறித்த இயந்திரங்கள் 2021.07.01 ஆம் திகதி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க (ONUR) அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

கணனிகள்

	25%	கிரயம்	25% தேய்மானம்
2021.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி		3,671,866.00	
2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் முழுமையான தேய்மானப் பெறுமதி		(1,528,016.00)	
தேய்மானமடையக் கூடிய கிரயத்தின் மீதி		2,143,850.00	535,962.50
2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் மீள் கணக்கிடப்பட்ட பெறுமதி		454,900.00	113,725.00
மொத்தம்			**649,687.50**

ரூ.1,528,016.00 பெறுமதியான கணனிகள் 2020 ஆம் ஆண்டில் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதோடு, அவை ரூ.454,900.00 இற்கு மீளக் கணக்கிடப்பட்டுள்ளன.

மோட்டார் வாகனங்கள்

	25%	கிரயம்	25% தேய்மானம்
2021.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி		6,365,000.00	1,591,250.00
மொத்தம்		**6,365,000.00**	**1,591,250.00**

மோட்டார் வாகனப் பெறுமதியானது 2021 ஆம் ஆண்டில் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதோடு, அவை 2020 ஆம் ஆண்டில் மீள் கணக்கிடப்படல் வேண்டும்.

அலுவலகத் தளபாடங்கள்

	10%	கிரயம்	10% தேய்மானம்
2021.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி		7,168,632.68	
முற்றாகத் தேய்மானமடைந்த தொகை		1,135,775.88	
தேய்மானமடையக் கூடிய கிரயத்தின் மீதி		6,032,856.88	603,285.68
முற்றாகத் தேய்மானமடைந்த சொத்துக்களின் மீள் கணக்கிடப்பட்ட பெறுமதி		181,250.00	
	மொத்தம்		**621,410.68**

ரூ.1,135,775.88 பெறுமதியான அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 2020 ஆம் ஆண்டில் முற்றாகத் தேய்மானமடைந்துள்ளதோடு, அவை ரூ.181,250.00 இற்கு மீளக் கணக்கிடப்பட்டுள்ளன.

அலுவலக உபகரணங்கள்

	10%	கிரயம்	10% தேய்மானம்
2021.01.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி		761,725.00	76,172.50
2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் 2020 டிசம்பர்		-	-
	மொத்தம்		76,172.50

இறுதி கணக்குகளுக்கான நடவக்கைகளை மேற்கொள்ளல்

2841 – எழுதுகருவிகள்

2021.01.01 ஆம் எழுதுகருவிகள் (இருப்பு)	திகதியன்று	818,090.00
கொன்வனவுகள்		267,863.41
2021.12.31 ஆம் எழுதுகருவிகள் (இருப்பு)	திகதியன்று	1,085,954.31
நுகர்வுப் பொருட்களின் கிரயம்		474,019.74
		536,013.30

செலுத்த வேண்டிய - இற்கான சீராக்கல் குறிப்புகள்

செலவினம்	பணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	[+] 2021 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய	[-] 2020 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய	[-] முற்கொடுப்பனவுகள்	2021 ஆம் ஆண்டிற்கான செலவினம்
2841 – எழுதுகருவிகள்	267,295.11	24,728.30	24,160.00	-	267,863.41
2811 – சம்பளம் மற்றும் வேதனம்	10,874,668.66	17,073.55	6,500.00	-	10,885,242.21
2883 – தொலைபேசி மற்றும் இணையம்	491,527.04	21,524.21	34,055.40	-	478,995.21
2886 – சுத்திகரிப்பு சேவைகள்	1,016,094.43	90,030.06	39,261.90	-	1,066,862.59
2887 – பாதுகாப்பு சேவைகள்	520,020.00	100,440.00	-	-	620,460.00
2849 - வேறு	375,921.95	-	22,000.00	-	353,921.95
2882 - வாடகை	1,214,000.00	1,821,000.00	-	-	3,035,000.00
3042 – அச்சீடு	444,738.00	-	99,738.00	-	345,000.00
2831 – போக்குவரத்து செலவினம்	52,607.00	1,050.00	2,100.00	-	51,557.00
2815 – மேலதிக நேர	877,483.62	22,604.45	64,496.54	-	835,591.53
2862 – அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	107,487.49	-	-	22,698.00	84,789.49
2861 – கட்டிட பராமரிப்பு	-	236,237.07	-	-	236,237.07
3302 – ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பரீட்சைகள்	-	347,383.39	-	-	347,383.39
3201 – கட்டிடங்கள்	2,005,550.26	1,291,798.13	-	-	3,297,348.39
3305 – பணிப்பாளர் சபை கூட்டம்	149,950.00	86,400.00	-	-	236,350.00
2864 – கணனி பராமரிப்பு	89,380.00	-	10,000.00	-	79,380.00

சம்பளம் மற்றும் வேதனம்	
செலுத்த வேண்டிய மற்றும் முற் கொடுப்பனவுகளின் பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கான செலவினம்	10,885,242.21
(-) சம்பள மிகை	(11,363.32)
2021 ஆம் ஆண்டிற்கான செலவினம்	10,873,878.89

உப கட்டுநிதிக் கணக்கு	
ஆரம்ப மீதி	193,530.75
(+) அரச அலுவலர்களுக்கான உப கட்டுநிதி	1,187,675.00
	1,381,205.75
(-) உப கட்டுநிதி தீர்த்தல்	1,202,175.00
தீர்ப்பனவு மீதி	**179,030.75**
தீர்க்கப்படாத உப கட்டுநீதி சீராக்கல்	**179,030.75**
தீர்ப்பனவு மீதி	**-**
2832 – நுகர்வுக் கணக்கு	
2842 – நுகர்வுப் பொருட்கள்	50,375.00
2840 – வழங்கல்	136,751.00
2021 ஆம் ஆண்டிற்கான செலவினம் - தொகையில்	**187,126.00**

கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள்	
முன் கொண்டு வந்த மீதி	313,214.00
(+) வருடத்தினுள் கூட்டல்கள்	250,000.00
(-)வருடத்தினுள் செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணங்கள்	427,200.00
2021.12.31 ஆம் திகதியன்று மீதி	**136,014.00**

வைப்புக்கள்	
2021.02.01 ஆம் திகதியன்று ஆரம்ப மீதி	3,250.00
2660 - வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற செலுத்த வேண்டிய வைப்புக்கள்	113,623.16
	116,873.16
(-) வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட வைப்புக் கொடுப்பனவுகள்	(31,500.00)
2021.12.31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய வைப்புக்களின் மீதி	**85,373.16**

2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இடர்க் கடன் மீதி

	பெயர்	2021.01.01 ஆம் திகதியன்று மீதி (ரூ.)	2021 வருடத்தினுள் வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.)	குறித்த தொகை வழங்கப்பட்ட செலவு மீதி	2021 வருடத்தினுள் மூலதன அறவீடுகள்	2021.12.31 ஆம் திகதியன்று மீதி (ரூ.)
1	ஜீ.ஏ.டீ.சீ.கனேபொல	248,129.54	29,370.46	2331	30,000.00	247,500.00
2	டப்ளியூ.டீ.பி.புஷ்பகுமார	216,480.37			30,000.00	186,480.37
3	எல்.ஜீ.எஸ்.காமிணி	222,500.00	55,000.00	2331	30,000.00	247,500.00
4	எம்.ஏ.எல்.எம்.ரமீஸ்	90,617.58			27,258.00	63,359.58
5	எச்.பி.ஏ.பிரேமலால்	190,942.02			29,016.00	161,926.02
6	பி.ஏ.ஆர்.நிலந்த	224,998.32			30,000.00	194,998.32
7	ஏ.என்.இப்பலவத்த	191,139.70			30,000.00	161,139.70
8	எஸ்.பி.கருணாசேன	195,040.80	82,460.00	2331	30,000.00	247,500.00
9	பி.எஸ்.ஜீ.குமாரி	247,495.83			30,000.00	217,495.83
10	டீ.கே.ஆரச்சி	225,000.00	27,500.00	2331	30,000.00	222,500.00
11	டப்ளியூ.கே.பிரியந்த	223,026.00			30,000.00	193,026.00
12	ஏ.டீ.டீ.என்.நந்தசேன	247,500.00			30,000.00	217,500.00
13	எஸ்.மதிவாணன்	165,000.00			30,000.00	135,000.00
14	ஏ.எம்.ஜீ.யூ.அபேகோன்	202,500.00			30,000.00	172,500.00
15	ஜே.பி.எஸ்.குமார்	222,500.00	55,000.00	2331	30,000.00	247,500.00
16	எச்.பி.எஸ்.சங்கீத்	237,600.00			29,700.00	207,900.00
17	பி.யெஷ்மினி	-	250,000.00	2331	27,500.00	222,500.00
18	என்.கே.என்.அமாலி	-	250,000.00	2331	27,500.00	222,500.00
19	ஜே.எம்.நிரோஜா	-	250,000.00	2331	25,000.00	225,000.00
20	உஷா தர்சினி	-	250,000.00	2331	25,000.00	225,000.00
	மொத்தம்	**3,350,470.16**	**1,249,330.46**		**580,974.00**	**4,018,826.62**

பகுதி IV

தலைவர்
அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மேற்போந்த அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் - 01. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

02. செயலாளர், பொரு நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சு

தலைவர்
அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 43 ஆம் பிரிவிற்கமைய பொறி மற்றும் உபகரணங்கள் மீள் கணக்கிடலின் போது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஏற்புடைய தொழிற் தகைமைகளைக் கொண்ட மதிப்பீட்டு தொழிற்துறையின் அங்கத்தவர் ஒருவரினால் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் எனினும் வேறு ஒரு நிறுவனத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர், பிரதம எழுதுநர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரைக் கொண்டமைந்த குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நியமத்தின் 52 ஆம் பிரிவிற்கமைய மீள் கணக்கிடல் பெறுபேறாக சொத்துக்களின் வகுப்பின் கொள்ளளவு பெறுமதி அதிகரிக்கையில், குறித்த அதிகரிப்பை நேரடியாக மீள் கணக்கிடல் மிகைக்கு வரவு வைத்தல் வேண்டும் எனினும் குறித்த பெறுமானமானது வேறு இருப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) அறைகளைப் பிரித்து வேறாக்கும் பணிக்கு மீளாய்வு வருடத்தின் இறுதி வரை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூ.2,428,510 பெறுமதியான தொகையானது வேலை பெறுமதி மேற்கொள்ளப்படும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக கட்டிடங்கள் மற்றும் கட்டுமானமாகக் காட்டப்பட்டிருந்தது. எனவே, கட்டிட பெறுமதியானது அத்தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் வேலைப் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு ஏற்புடைய அளவீட்டுத்தாள்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதே போன்று கழிவறை நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை ரூ. 868,837 மேற்கொள்ளப்பட்டு வரும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தாலும், அதற்கான உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பத்திரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2018 மற்றும் 2019 வருடங்களில் நடைமுறைச் சொத்துக்களாகக் கணக்கில் பதியப்பட்டிருந்த இணையத்தளத்திற்கான ரூ.614,800 அசையாச் சொத்தாகக் கணக்கில் பதிவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதன் பொருட்டு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஆணைக்குழுவின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஆணைக்குழுவின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்களானது ஏனைய தகவல்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு, நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலும் உறுதிப்படுத்தவோ கருத்துத் தெரிவிக்கவோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்விற்கு ஏற்புடையதாக மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போதோ வேறு வழியிலோ பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு எட்டிய வரையில் அளவு சார் ரீதியில் பொருந்தவில்லையா என்பது குறித்து கவனம் செலுத்துவதே எனது பொறுப்பாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் நான் மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் அளவு சார் ரீதியில் பிழையாகக்

குறிப்பிடப்பட்டுள்ளன என நான் தீர்மானித்தால், அந்த விடயத்தை நான் அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் எனக்கு எந்தவொரு அறிக்கையிடலும் இல்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவமானது ஆணைணக்குழுவைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பிற்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்த அடிப்படையில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும்

கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாத போதும், சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலை குறித்த பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை குறித்த அடிப்படையைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது என நான் தீர்மானித்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதோடு, அவ் வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாவிட்டால் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலை முடிவுறுத்தப்படலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்ட தரப்பினருக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க கணக்காய்விற்குத் தேவையான அனைத்துத் தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்பவற்றை நான் பெற்றுக் கொண்டுள்ளதோடு, எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவினால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(I) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்துள்ளன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் 1.2 (ஈ) இல் தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தலில் பின்வரும் வெளிப்படுதலை செய்யுமளவிற்கு எதுவும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவின் ஆளுகை சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழு தொடர்பில் ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அலலது வேறு வகையில் வழமையான வணிக செயற்பாட்டிற்கு வெளியே தொடர்பொன்று காணப்படுகின்றமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்த்து ஏதேனுமொரு எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளமை.

பணிப்புரைகளுக்கான தொடர்பு	அவதானிப்பு
(அ) 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தின் பகுதி II இன் 13(3) ஆம் பிரிவு	பிரிவின் பிரகாரம் தவிசாளர் ஆணைக் குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருப்பினும் அவர் ஆணைக்குழுவின் பணிக்குழுவின் அங்கத்தவராக இல்லாதிருப்பினும் ஆணைக்குழுவின் காசோலைகளில் ஒப்பமிடும் பணியில் ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.
(ஆ) 2003 ஆம் ஆண்டின் யூன் 02 ஆம் திகதிய மற்றும் PED/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் 5.5.5 ஆம் பந்தி	ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும் அவ்வாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் ஒழுங்குவிதி (396) (ஈ)	2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த 06 மாதங்கள் கடந்த ரூ.113,800 பெறுமதியான 18 காசோலைகள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக கால வரையறைகளுக்குள் ஏற்புடைய விதிமுறைகளுக்கு அமைவாகபெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமை.

2.3 வேறு விடயங்கள்

(அ) 2021 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் அதற்கு முன்னர் அலுவலகத்தைப் பிரிவுகளாக்கும் பணிக்கு

சஹரா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்துடன் ரூ.3,469,301 (வெட் உடன்) பெறுமதியான உடன்படிக்கையொன்றை மேற்கொண்டு ரூ.1,697,737 தொகை செலுத்தப்பட்டிருந்தாலும் இதற்கு பணிப்பாளர் சபை அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சட்ட ரீதியாக கட்டிட உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் ஆணைக்குழு தவிசாளரின் உத்தியோகபூர்வ அறைக்கு அருகாமையில் கழிவறையொன்றை நிர்மாணிப்பதற்கு ரூ.1,251,126 (வெட் உடன்) பெறுமதியான உடன்படிக்கையொன்று பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, கழிவறையை நிர்மாணிப்பதற்கு செலவிடப்படும் தொகையை மீள அறிவிடும் முறை தொடர்பில் நகர சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வராத காரணத்தால் அத் தொகையை அறவிடுவது சிக்கலானது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 ஆம் ஆண்டு ஆணைக்குழுவை தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு கட்டிடத்தில் தாபிக்கையில் அலுவலக வேறாக்கல், மின்சார முறைமை, காபட் விரித்தல், குளிரூட்டிகள், உள்ளக தொலைபேசி முறைமைகள் என்பவற்றிற்கு ரூ.2,687,043 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் 4 வருடங்களின் பின்னர் மீளவும் மற்றுமொரு இடத்தில் ஆணைக்குழுவை தாபிப்பதற்கு மீளவும் அறவிட முடியாத ரூ.4,720,427 செலவிடப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

டப்ளியூ.பி.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி